திரு. த. சோனேயா : எழும்பூர் இரயில் நிலேயத்தில் இறங்கி சட்ட மன்ற உறுப்பினர்கள் சட்ட மன்ற விடுதிக்கு வர பஸ் வசதி போதவில்லே, கஷ்டப்படுகிருர்கள். சட்ட மன்றம் நடக்கும் காலத்தில் எழும்பூருக்கும் சட்ட மன்ற விடுதிக்கும் தொடர்ந்து பஸ் போய்க் கொண்டிருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சட்ட மன்றக் கூட்டத் தொடர் ஆரம்பிக்கின்ற நேரத்திலும், சட்ட மன்றக் கூட்டத் தொடர் முடிகின்ற நேரத்திலும் அத்தகைய ஏற்பாட்டைச் செய்யலாமா என்று அரசாங்கம் பரிசீலனே செய்து நடவடிக்கை எடுக்கும்.

Special buses to Thirunallar.

* 566 *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Tamil Nadu State Transport and the Cholan Roadways Corporation have proposed to ply ' round the clock bus service ' to Thirunallar for " the transit of Saturn festival "; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) திருநள்ளாரில் நடைபெற்ற சனிப் பெயர்ச்சி திருவிழாவையொட்டி சோழன் சாலேப் போக்குவரத்துக் கழகமும், தமிழ்நாடு போக்குவரத்துத் துறையும் 8—7—73-லிருந்து 14—7—73 வரையில் தனிப் பேருந்துகளே இயக்கி வந்தன.

ஆலயங்களில் அரிசன அர்ச்சகர்கள்.

* 567 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலேயத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

ஆலயங்களில் தற்போது எத்தனே அரிசனர்கள் அர்ச்சகர் களாகப் பணியாற்றுகிருர்கள் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : 42 (நாற்பத்திரெண்டு பேர்).

1973 டிசம்பர் 1]

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, ஆலயங்களில் தற்போதுள்ள அரிசன அர்ச்சகர்களின் எண்ணிக்கை குறைவு. ஆகவே, இந்த எண்ணிக்கையை அதிகரிக்க, ஏற்கெனவே சுப்ரீம் கோர்ட்டில் அளிக்கப்பட்டத் தீர்ப்பிற்கிணங்க, வேறு வகையிலே நடவடிக்கை எடுக்க ஒரு சட்டத் திருத்தத்தை மத்திய அல்லது மாநில அரசு உருவாக்க முயற்சி மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, ஏற்கெனவே இருக்கின்ற 42 அரிசன அர்ச்சகர்கள் தற்போது நியமிக்கப்பட்டவர்கள் அல்ல. தொன்றுதொட்டு, அவர்கள் கிராம நடைமுறைகளின்படி பரம்பரை முறையில் ஊழியம் செய்து வருகிறார்கள். நாம் சட்டத்தை திருத்தியதன் நோக்கம் எந்த ஜாதிக்காரர்களாக இருந்தாலும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அரிசனங்களாக இருந்தாலும் அர்ச்சகர்களாக வருவதற்கு தடை இருக்கக்கூடாது; ஏற்றத் தாழ்வு கூடாது என்ற நோக்கத்தோடுதான் செய்தோம். பரம்பரை உரிமை தேவையில்லை என்று சட்டம் இயற்றினோம். சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு பரம்பரை அறங்காவலர்களை ஒழிப்பதாக இருந்தாலும், ஆகம விதிமுறைகளின்படி அர்ச்சகர்கள் நியமிக்கப் படவேண்டும் என்று தீர்ப்பளித்திருக்கிறார்கள். ஆகவே, அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதால், 3 மாதங்களுக்கு முன்னால் நம்முடைய முதலமைச்சரவர்கள் இந்திய அரசுக்கு அரசியல் சட்டத்தைத் திருத்தி, அரிசனங்கள் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட வகை செய்யவேண்டுமென்று கேட்டுள்ளார்கள்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, இந்த 42 பேர்களில் அரிசனங்கள் எந்த எந்த ஆலயங்களில் வேலை செய்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பெரும்பாலும் கிராமப் புறங்களில் இருக்கின்ற கோவில்களில் வேலை செய்கிறார்கள். சென்னை நகரில் 10 கோவில்களில் இருக்கிறார்கள். தனிக் கேள்வி போட்டால் பட்டியல் வைக்கப்படும்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, வேத ஆகமத்தைப் படித்தவர்களை அர்ச்சகர்களாகப் போடவேண்டுமென்று சொல்லி யிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படியானால்

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS LEGISLATURE

வேத ஆகமத்தைப் படிப்பதற்கு ஏற்பாடு செய்து, எல்லா ஆலயங்களிலும் கம்பல்சரியாக ஒரு அரிசன அர்ச்சகரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, வேத ஆகமம் படித்தவர்கள் என்று நான் சொல்லவில்லை. ஆகம விதிகளின்படி போடவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் சொல்லியபடி அரசியல் சட்டத்திருத்தம் வருவதாக இருந்தால் யாராக இருந்தாலும், எந்த ஜாதியாக இருந்தாலும் அர்ச்சகராக நியமிக்கப்படலாம்.

அருள்திரு நடராஜர் கோயில், சிதம்பரம்

*** 568 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் அருள்திரு நடராஜர் கோயில் இந்து அறநிலையப் பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கி வருகின்றதா ?

மாண்புமிகு திரு. மு கண்ணப்பன் : இத்திருக்கோயிலுக்கு அறங்காவலர்கள் நியமனம் செய்வது நீங்கலாக மற்றவை இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த சிதம்பரத்திலே இருக்கின்ற நடராஜர் கோவில், தர்மபுரம் ஆதினத்தின்கீழ் உள்ள கோவில்கள், திருவாவடுதுறை ஆதீனத்தின்கீழ் உள்ள கோவில்கள் ஆகியவற்றில் எல்லாம் டிரஸ்டிகளை நியமிக்கும்போது, அவர்களை நியமிக்கும் அதிகாரம் அரசுக்கு இல்லை என்று சொல்கிறார்கள். அந்த அதிகாரத்தைப்பெற நமது அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : சிதம்பரத்திலே இருக்கின்ற நடராஜர் கோவிலைப்பற்றித்தான் விவரம் இருக்கிறது. இந்த கோவிலைப் பொறுத்தவரையில் அறங்காவலர்களை நியமிப்பது சுப்ரீம் கோர்ட் தீர்ப்புப்படி நடக்கிறது. 1933-ம் ஆண்டில் தென்னாற்காடு மாவட்ட நீதிமன்றத் தீர்ப்பின்படியும், அதற்குப் பிறகு சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பின் படியும், 1936-ம் ஆண்டு தீர்ப்பின்படியும் மாற்றியமைக்கப்பட்ட நிர்வாகத் திட்டத்தின்கீழ் அறங்காவலர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.